18 JUL 2014
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு 2009/2010

(மார்ச்-மே 2014) (வெளிவாரி)

## EDU 302 பாடசாலை முகாமைத்துவம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01.(அ) முகாமைத்துவத்தில் விளைதிறன், வினைத்திறன் எனும் எண்ணக் கருக்களைத் தகுந்த உதாரணங்கள் தந்து விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) அதிபர் ஒருவர் கவனத்திற்கொள்ள வேண்டிய பாடசாலை முகாமைத்துவ அம்சங்கள் எவை என ஆராய்க?

(10 புள்ளிகள்)

02.(அ) பாடசாலை முகாமைத்துவத்தில் தொடர்பாடலின் முக்கியத்துவத்தை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) அதிபர் ஒருவர் பாடசாலையில் தொடர்பாடலை மேற்கொள்ளும் வழிமுறைகள் எவை என ஆராய்க.

(10 புள்ளிகள்)

03. நிறுவனம் ஒன்றில் புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்தும்போது நிறுவனத் தலைவர் எதிர்கொள்ளும் சவால்களைக் குறிப்பிட்டு அவற்றை எவ்வாறு வெற்றி கொள்ளலாம் எனக் கருத்துரைக்க.

(20 புள்ளிகள்)

04. முகாமைத்துவத்தில் தீர்மானஞ் செய்தலின் முக்கியத்துவத்தை விளக்கி, தீர்மானம் செய்தலில் பின்பற்ற வேண்டிய படிமுறைகளை விமர்சன ரீதியாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. பாடசாலை அதிபர் ஒருவர் கலைத்திட்ட முகாமைத்துவத்தை எவ்வாறு பயன்தரும் முறையில் மேற்கொள்ளலாம்? கலைத்திட்ட முகாமைத்துவத்தின் பல்வேறு அம்சங்களையும், அத்துடன் தொடர்புறும் ஆளணியினரது கடமைகளையும் விரிவாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

06. இன்று பாடசாலைகள் எதிர்கொள்ளும் மாணவர் தொடர்பான பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளையும் முன்வைக்குக.

(20 புள்ளிகள்)

07. பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள வகைமூன்று பாடசாலைகளில் குறிப்பாகக் காணப்படும் பிரச்சினைகளை வகைப்படுத்தி அவற்றைத் தீர்ப்பதில் அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர் எவ்வகையில் இணைந்து செயற்படலாம் என ஆராய்க.

(20 புள்ளிகள்)

08. பாடசாலை மட்டத்திட்டமிடலில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து அவற்றைத் தீர்ப்பதற்கான தீர்வாலோசனைகளை முன்வைக்குக.

(20 புள்ளிகள்)